



ஈரோடு தெற்கு மாவட்டம், ஈரோடு மாநகரம், வில்லரசம்பட்டி – கொல்லம்பாளையம் பகுதி கழகத்தின் சார்பில் ஸ்போர்ட்ஸ் வில்லேஜ் இல் மாபெரும் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் 6.1.2026 நடைபெற்றது. ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு போட்டியினை துவக்கி வைத்தார். உடன் பகுதி கழக நிர்வாகிகள், அணித் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருச்சி மாவட்டம்

# திருவெறும்பூர் தொகுதியில் வாக்காளர் சேர்ப்பு முகாம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு!

திருச்சி, ஜன. 8-

திருச்சி தெற்கு மாவட்டம் திருவெறும்பூர் தொகுதி மாநகராட்சிக்கு உட்பட்ட திருவெறும்பூர் பகுதி முக்குலத்தோர் பள்ளி வார்டு எண் 41, 41அ பாக எண் 47,48,49,50,51, 52,53,54 காட்டூர் பகுதி லோமினால் பள்ளி வார்டு எண் 43 பாக எண் 85, 86, பொன்மலைப் பகுதி வார்டு எண் 46 பாக எண் 64,65, அரியமங்கலம் பகுதி செந்தனியபுரம் தொடக்கப்பள்ளி,

வார்டு எண் 35 பாகஎண் 151, 155, 156, 157, 158, 159, வார்டு எண் 34அ, பாகஎண் 147 149 150 வார்டு எண் 49அ பாகஎண்148 பூத்துகளில் நடைபெற்று வரும் வாக்காளர் சேர்ப்பு முகாமினை ஆய்வு செய்த அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நடைபெற்று வரும் வாக்காளர் பெயர் சேர்ப்பு முகாம்களில் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களை சேர்க்க படிவம்,

மேலும் விடுபட்ட வாக்காளர்களை உரிய ஆவணங்கள் கொண்டு வாக்காளர் பெயர் சேர்க்கும் படிவம் 6 பூர்த்தி செய்து உரிய பி.எல்.ஓ.க்களிடம் வழங்குகின்ற பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை பூத்தில் உள்ள பி.எல்.ஏ.க்கள், மற்றும் பி.எல்.ஏ 2 களிடம் கேட்டு ஆய்வு செய்தார் .

இந்நிகழ்வின் போது மாநகரக் கழகச் செயலாளர் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் நீல மேகம், தர்மராஜ், ராஜ் முகம்மது, விஜய குமார், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் உடன் இருந்தனர்.

### இங்கிலாந்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினால் பென்னி குயிக் சிலை அமைந்துள்ள

# கேம்பர்லீ நகரை மதுரையோடு இணைக்கும் கலாச்சாரத் திட்டம்!

## ஒருங்கிணைந்த பிரிட்டன் தமிழ்ச் சங்கத் தலைவர் லண்டன் செந்தில்குமார் தகவல்!

லண்டன், ஜன. 8 -

இங்கிலாந்தில் தமிழக முதல்வரால் பென்னி குயிக் சிலை அமைந்துள்ள கேம்பர்லீமதுரை நகரங்களை கலாச்சார இணைப்புத் திட்டத்தில் சேர்க்க ஒருங்கிணைந்த பிரிட்டன் தமிழ் சங்கங்களின் ஃபெப்டா யூ.கே சார்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அதன் தலைவர் லண்டன் செந்தில் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முல்லை பெரியாறு அணையைக் கட்டிய பென்னி குயிக்கு நன்றிக்கடனாக, கலாச்சார இணைப்புத் திட்டத்தில் கேம்பரிலீ - மதுரை நகரங்களைக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் பொங்கல் திருநாளில் கையெழுத்தாக உள்ளது.

தமிழகத்தின் தென் மாவட்டங்களின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் முல்லை பெரியாறு அணையைக் கட்டியவர் பொறியாளர் ஜான் பென்னி குயிக். பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த அணையை அவர் கட்டி முடித்தார்.

அவரது நினைவைப் போற்றும் வகையில் தேனி மாவட்டம் கூடலூரில் பென்னி குயிக் மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது. மேலும், அவர் பிறந்த கேம்பரிலீ நகரத்தில் தமிழகம் அரசு சார்பில் சிலையும் அமைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து கலாச்சார இணைப்புத் திட்டத்தின் மூலம் மதுரை மற்றும் கேம்பரிலீ நகரங்களை கொண்டு வரத் தமிழக அரசு முடிவு செய்தது. இது தொடர்பாக கடந்த செப்டம்பர் 9 தேதி செய்தி வெளியிடப்பட்டது. அந்த வகையில் இது நகரங்களுக்கும் இடையேயான கலாச்சார இணைப்பு ஒப்பந்தம் பொங்கல் திருநாளில் மதுரையில் கையெழுத்தாக இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து ஃபெப்டா யூ.கே தலைவர் லண்டன் செந்தில் குமார் தெரிவித்துள்ளதாவது:-

இந்த ஒப்பந்தம் இரு நகரங்களுக்கு இடையே வரலாற்று ரீதியான தொடர்பைப் புதுப்பிப்பதுடன் எதிர்கால வளர்ச்சிக்கும் வித்திடும்.குறிப்பாக கலாச்சார பரிமாற்றம், தொழில் முதலீடுகள், கல்வி போன்ற அம்சங்களை மேம்படுத்தும். கடந்த வருடம் மே மாதம் அயலகத் துறை மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி நாசர் லண்டன் வந்து இருந்தபோது கேம்பர்லீ-மதுரை இணைக்கும் திட்டத்தினைத் தெரிவித்தனர்.

அமைச்சர் சா.மு. நாசர்,முதலமைச்சர் அவர்களுக்கும் துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் இந்தச் செய்தியைத் தெரிவித்தார். முதல்வர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

மேலும், அதன்படி சர்ரே மாகாணத்தின் மேயர் லூயிஸ் ஆஷ்பெரி, கேம்பர்லீ தமிழ் சங்க செயலாளர் சந்தான பீர் ஒலி மற்றும் ஒருங்கிணைந்த பிரிட்டன் தமிழ் சங்க தலைவர் லண்டன் செந்தில் குமார் தலைமையிலான குழு தமிழகத்திற்கு ஜன.11ம் தேதி வருகைத் தரவுள்ளனர். அன்றைய தினம் முதல்வர் மு.க.ஸ்டாலினை சென்னையில் சந்தித்து ஒப்பந்தம் குறித்து கலந்துரையாட உள்ளனர்.

அதன்பின் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களுக்குச் சென்று ஜன.14ஆம் தேதி பொங்கல் விழாக்களில் பங்கேற்க உள்ளனர். அவ்விழாவில் ஜல்லிக்கட்டு போட்டிகளையும் அவர்கள் பார்வையிடுகின்றனர்.

இறுதியாக இரு நகரங்களின் ஆணையர்களும் ஜன.16ம் தேதி கலாச்சார இணைப்புத் திட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளனர். பென்னி குயிக் என்ற மாமனிதருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாக இது அமையும்.

என்று அவர் கூறினார்.

கடந்த வருடம் மே மாதம் அயலகத் தமிழர் நலத் துறை மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி நாசர் லண்டன் வந்து இருந்த போது சர் பென்னி குயிக் சமாதி அமைந்துள்ள தேவாலத்திற்கு வருகை தந்தார், அப்போது கேம்பர்லீமதுரை இணைக்கும் திட்டத்தினைத் தெரிவித்தனர்.

அமைச்சர் சா.மு.நாசர், முதலமைச்சர் மற்றும் துணை முதல்வர் அவர்களுக்கும் துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் இந்தச் செய்தியைத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து முதல்வர் அவர்கள் இதில் உள்ள சாத்திய கூறுகளை அறிந்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 49வது சென்னைப் புத்தகக் காட்சி

# “கலைஞர் கருவூலம்”

## விற்பனைக் கூடத்தில்

# தலைமைக் கழக வெளியீடுகள்

**49வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2026 ஜனவரி 8 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.**

**புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 279ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

# 2026 பொங்கலில் பெருகும் பொருள் சிறப்பு!

## ( வாட்ஸ்அப்பில் வேகமாக வலம் வரும் செய்தி )



**EPS ரூ.5000 கொடுக்கச் சொன்னார் ஆனால் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அதை கேட்காமல்**

1. **பொங்கல் பரிசு அனைத்து குடும்பத் தலைவிகளுக்கு ரூ.3000**
2. **கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000**
3. **புதுமைப் பெண் ரூ.1000**
4. **தமிழ்ப்புதல்வன் ரூ.1000**
5. **மகளிர் விடியல் பயணம் மூலம் குறைந்த பட்சம் ரூ. 1000**
6. **லேப்டாப் ரூ. 20,000**
7. **அரசு ஊழியர்களுக்கு ரூ.3000 போனஸ்**
8. **TAPS என்ற அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம்**
9. **தாயுமானவர் திட்டம்! என்று 2026 தை முதல் நாள், தை பொங்கல் கொண்டாட**

**9 திட்டங்களை எல்லோர் இல்லங்களிலும் கொண்டு போய் சேர்த்துள்ளார்கள்...!**

**அதில் பாருங்க**

1. **ரேஷன் கார்டு இருந்தால் போதும் ரூ.4000 கிடைக்கும் பொங்கலுக்கு.**
2. **ரேஷன் கார்டு + காலேஜ் படித்தால் ரூ.5000**
3. **ரேஷன் கார்டு + இருபாலரும் கல்லூரி படித்தால் ரூ. 6000 .**
4. **3+லேப்டாப் னா குறைந்தது ரூ.25,000**

**இப்படி விடியல் ஆட்சியின் மூலம் ஏதாவது ஒரு திட்டத்தால் பயனடையும் 2026 பொங்கல் சிறப்பு...!**